S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வியாழன் நவம்பர் 20 * 2025 * மலர் -1 * இதழ்-172* VOL-1 * ISSUE-172 விலை ரூ.3 * பக்கம் -4

## கோவை, மதுரை மெட்ரோ நிராகரிப்பு:

# மத்திய அரசின் செயலுக்கு முதல்வர் ஸ்டாலின் கண்டனம்!

## "கூட்டாட்சி கருத்தியலைச் சிதைப்பதை தமிழ்நாடு ஒருபோதும் ஏற்காது"!!

**சென்னை, நவ.20–**

கோவை, மதுரை மெளுடன் கடந்த ஆண்டு நவம்பரில் மீண்டும் அனுப்பப்பட்டது. இது தொடர்பாக மத்திய அரசிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை. இந்நிலையில், கோவை, மதுரை நகரங்களில் மெட்ரோ ரெயில் திட்டத்தை செயல்படுத்தும் அறிக்கைக்கு ஒப்புதல் வழங்காமல், மத்திய அரசு திருப்பி அனுப்பி உள்ளது.

மெட்ரோ ரெயில் திட்டத்துக்குப் பதிலாக, பேருந்துகள் மட்டுமே இயக்கப்படும் பிஆர்டிஎஸ் (பஸ் ரேபிட் டிரான்சிட் சிஸ்டம்) போன்ற திட்டத்தை செயல்படுத்தலாம் என்றும் மத்திய அரசு தெரிவித்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஸ்டாலின் கண்டனம்:

மத்திய அரசின் இந்த செயலுக்கு முதல்வர் ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளபதிவில் ,கூறியிருப்பதாவது

'கோயில் நகர்' மதுரைக்கும், 'தென்னிந்திய மான்செஸ்டர்' கோவைக்கும் "மெட்ரோ இல்லை" என நிராகரித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு!

அனைவருக்கும்பொதுவானதாகச் செயல்படுவதுதான் அரசுக்கான இலக்கணம். அதற்கு மாறாக, பா.ஜ.க.வைத் தமிழ் நாட்டு மக்கள் நிராகரிப்பதற்காக இப்படி பழிவாங்குவது கீழ்மையான போக்கு. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் உள்ள சிறிய இரண்டாம் நிலை மாநகரங்களுக்குக் கூட மெட்ரோ ரெயிலுக்கான ஒப்புதல் வழங்கிவிட்டு, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களைப் புறக்கணிப்பது அழகல்ல. கூட்டாட்சிக் கருத்தியலை இப்படி சிதைப்பதைச் சுயமரியாதைமிக்க மண்ணான தமிழ்நாடு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது.

சென்னை மெட்ரோ பணிகளைத் தாமதப்படுத்தி முடக்க நடந்த முயற்சிகளை முறியடித்து முன்னேறினோம்! அதேபோல மதுரை & கோவையிலும் வருங்கால வளர்ச்சிக்கு இன்றியமையாத தேவையான மெட்ரோ ரெயிலைக் கொண்டுவருவோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகத்தின் இயக்குநர் டாக்டர் பூர்விக் புக்கிரியால், செயல் பதிவாளர் சி.டி. ஜடேஜா, தமிழ்நாடு தடய அறிவியல்துறையின்இயக்குநர்கோ.முனிராசன்ஆகியோர்சந்தித்து,தமிழ்நாட்டில்தேசியதடயஅறிவியல்பல்கலைக்கழகம்அமைத்திடசெங்கல்பட்டுமாவட்டம்,கீழக்கோட்டையூரில் 35ஏக்கர்நிலம்ஒதுக்கீடுசெய்து ஆணைவெளியிட்டமைக்காகநன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன்நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி, தொல். திருமாவளவன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன் மற்றும் தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழக நிர்வாகிகள் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது முனைவர் பட்டத்திற்கான Provisional Certificate காண்பித்து வாழ்த்துகள் பெற்றார்.

## ராமேசுவரம் அருகே பள்ளிக்கு சென்றபோது பயங்கரம்:

# காதலிக்க மறுத்த பிளஸ் 2 மாணவி கத்தியால் குத்திக்கொலை!

## போலீசில் வாலிபர் சரணடைந்தார்!!

**ராமேசுவரம் நவ.20**

காதலிக்க மறுத்த பிளஸ் டூ மாணவி பள்ளிக்கு சென்ற போது கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டார். இதை யொட்டி வாலிபர் போலீசில் சரண் அடைந்தார்.

ராமேசுவரம் அருகே இன்று காலை நடந்த இந்த பயங்கர சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:

ராமேசுவரம் சேராங்கோட்டையை சேர்ந்தவர் மாரியப்பன். இவரது மகள் ஷாலினி ( 17) இவர் அந்த பகுதியில் உள்ள ஒரு பள்ளியில் பிளஸ் டூ படித்து வந்தார். அதே ஊரை சேர்ந்தவர் குப்புச்சாமி. இவரது மகன் முனிராஜ் ( 21). இவர் மாணவி ஷாலினியை ஒருதலைபட்சமாக காதலித்ததாக கூறப்படுகிறது. தன்னை காதலிக்கும்படி வற்புறுத்தியும் வந்தாராம். ஆனால் இவரது காதலை மாணவி ஷாலினி ஏற்க மறுத்தார். இந்த நிலையில் நேற்று காலை ஷாலினிதான்படிக்கும்பள்ளிக்கு சென்று கொண்டிருந்தார். அவரை வாலிபர் முனிராஜ் மாணவியை வழிமறித்து தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து கழுத்தில் சரமாரியாக குத்தினார். இதில் அதே இடத்தில் மாணவி ஷாலினி ரத்த வெள்ளத்தில் பிணமானார்.

அதன் பிறகு முனிராஜ் சேராங் கோட்டை போலீஸ் நிலையத்துக்கு சென்று சரண் அடைந்தார். அவரை போலீசார் கைது செய்தனர். அதைதொடர்ந்து சம்பவ இடத்துக்கு சென்று மாணவியில் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ராமேசுவரம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

மாணவியை பறிகொடுத்த பெற்றோரும், உறவினர்களும் மாணவியின் உடலை பார்த்து கதறி அழுதது நெஞ்சை உருக்குவதாக இருந்தது. கத்தியால் குத்தப்பட்டு மாணவி கொல்லப்பட்ட சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## ஆம்பூர் அருகே

# 8 நாட்களுக்கு முன்பு காணாமல் போன தொழிலாளி சடலம் மீட்பு!



**ஆம்பூர். நவ.20**

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த வெங்கிலி பகுதியை சேர்ந்தவர் கட்டிட தொழிலாளி ரகு (40). இவருக்கு மனைவி மற்றும் இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளன. இவர் பேரணாம்பட்டு, குடியாத்தம் ஆகிய பகுதிகளுக்கு கட்டிட வேலைக்கு சென்று வருவது வழக்கம்.

இந்த நிலையில் கடந்த 10 ஆம் தேதி வழக்கம் போல் காலை 6 மணிக்கு வேலைக்குச் சென்றவர் மாலை வெகு நேரமாகியும் வீடு திரும்பவில்லை. இதனால் அவரது மனைவி மற்றும் உறவினர்கள் பல இடங்களில் தேடியும் கிடைக்காததால் இது குறித்து ஆம்பூர் கிராமிய காவல் நிலையத்தில் அவரது மனைவி வனிதா புகார் அளித்துள்ளார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து காணாமல் போன ரகுவை தேடி வந்தனர். இந்நிலையில் நேற்று மாலை வெங்கிலி அருகே பாலாற்றில் சடலம் ஒன்று மிதப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. தகவலின் பேரில் கிராமிய போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சடலத்தை கைபற்றி பிரேத பரிசோதனைக்காக ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் காணாமல் போன ரகு மனைவிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு பாலாற்று நீரில் மிதத்து வந்த சடலம் ரகு என்பவரது என்று உறுதி செய்தனர். சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து கட்டிட வேலைக்குச் சென்ற ரகு பாலாற்று நீரில் தவறி விழுந்து அடித்து செல்லப்பட்டு உயிரிழந்தாரா? அல்லது வேறு ஏதேனும் காரணமா என கிராமிய போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



கோவை கொடிசியாவில் பிரதமர் மோடி பங்கேற்பு உள்ளார். இந்நிலையில் அவரை வரவேற்க கொடிசியா முன்பு படுகா நடனமாடிய கலைஞர்கள். உடன் சேர்ந்து பாஜக தொண்டர்களும் நடனம் ஆடினர்.



சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரம் குரும்பபட்டி கிராமத்தில் தொடங்கி கருங்காலி கிராமம் மற்றும் குடவம்பட்டி கிராமம் வழியாக 25 கி.மீ மலைபாதையில் நடந்தே சென்று சொனப்பாடி மலைக்கிராமத்தில் வசிக்கும் பழங்குடியினர் மக்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு வழங்கப்படும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட சுகாதார அலுவலர் யோகநாதன் உடனிருந்தார்.

# ஆம்பூர் அருகே சாலை கடக்க நின்று கொண்டிருந்த ஐயப்பா பக்தர்கள் மீது வாகனம் மோதி விபத்து!

## 2 பேர் பலி– 2 பேர் படுகாயம்!!



**ஆம்பூர்.நவ.20**

திருவள்ளுவர் மாவட்டம் திருத்தணி அடுத்த முருகம்பட்டு கிராமத்தை சேர்ந்த 36 பேர் கடந்த 13 ஆம் தேதி பேருந்தில் சபரி மலைக்கு சென்று சாமி தரிசனம் செய்த பின்னர் ஊர் திரும்பிக் கொண்டிருந்தனர்.

அப்போது திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த செங்கிலி குப்பம் பெங்களூர் சென்னை தேசிய நெடுஞ்சாலை ஓரம் தேநீர் குடிப்பதற்காகபேருந்தைநிறுத்தியுள்ளனர். இந்நிலையில் அவ்வழியாக வந்த சரக்கு வாகனம் அங்கே நின்று கொண்டு இருந்த கண்டைனர்லாரி மீது மோதி பின்னர்சாலை கடக்க நின்று கொண்டு இருந்த ஐயப்பா பக்தர்கள் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. இதில் ஐயப்பா பக்தர்கள் கங்காதரன், சூர்யா, ஹரி, நரசிம்மன் ஆகிய 4 பேர் படுகாயம் அடைந்தனர். படுகாயம் அடைந்தவர்களைபகுதி மக்கள்மீட்டு சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதில் கங்காதரன், சூர்யா இருவர் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உயிரிழந்தனர். நரசிம்மன் மற்றும் ஹரி ஆகிய இருவர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு பின்னர் மேல் சிகிச்சைக்காக அடுக்கம்பாரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற ஆம்பூர் கிராமிய போலீஸார் இறந்தவர்களின் பிரேதத்தை கைபற்றி பிரேத பரிசோதனைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து பின்னர் சம்பவம் குறித்து போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### புதுக்கோட்டை அருகே

# வடகாடு இளைஞர் சிங்கப்பூரில் மின்னல் தாக்கி சாவு!

## உடலை தாயகம் கொண்டு வர உறவினர்கள் கோரிக்கை!!

புதுக்கோட்டை,நவ.20

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள வடகாடு சேர்வகாரன்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் மதியழகன். இவர் சுமை தூக்கும் தொழிலாளி. இவரது மனைவி சகுந்தலா. இவர்களுக்கு வினிதா என்ற மகளும் செந்தூரன்(25) என்ற மகனும் உள்ளனர்.

வினிதா செவிலியர் படிப்பை முடித்துவிட்டு சவுதி அரேபியாவில் கடந்த மூன்று ஆண்டு காலமாக செவிலியராக பணிபுரிந்து வந்த நிலையில் தற்போது அவருக்கு திருமணத்திற்காக வரன் பார்ப்பதால் கடந்த ஆறு மாத காலமாக சொந்த ஊரில் இருப்பதாக கூறப்படுகிறது.

இந்நிலையில்தான் செந்தூரன்(25) ஐடிஐ படித்துள்ள நிலையில் கடந்த 11 மாதங்களுக்கு முன்பு குடும்ப வறுமையை போக்க சிங்கப்பூருக்கு எலக்ட்ரிஷன் பணிக்கு சென்றுள்ளார். இந்நிலையில் தான் சிங்கப்பூரில் உள்ள புகிட் படாக்(Bukit Batok) பகுதியில் நேற்று முன்தினம் மாலை செந்தூரன் பணிபுரிந்த போது திடீரென்று மின்னல் தாக்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இதனைத் தொடர்ந்து அவர் உயிரிழந்த தகவலை உடன் பணிபுரிந்தவர்கள் அவரது பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு தெரிவித்துள்ளனர். இதனால் அதிர்ந்து போன செந்தூரன் பெற்றோர் மற்றும் உறவினர்கள் செய்வதறியாமல் தவித்து கண்ணீரில் மூழ்கியுள்ளனர்.



மேலும் இளைஞர் செந்தூரன் சிங்கப்பூரில் உயிரிழந்த சம்பவம் அவரது கிராமத்தையே சோகத்தில் மூழ்கடித்துள்ளது.

மேலும் செந்தூரனின் தந்தையான மதியழகன் கடந்த 15 தினங்களுக்கு முன்புதான் குடல்அறுவை சிகிச்சை செய்து கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு வீடு திரும்பிய நிலையில் நேற்று காலையில் தான் செந்தூரன் அவரது தந்தையிடம் தொலைபேசியில் பேசி நலம் விசாரித்ததாகவும் குடும்ப வறுமையை போக்கவே செந்தூரன் சிங்கப் பூருக்கு பணிக்கு சென்றதாகவும் அதே போல் கடந்த மூன்று ஆண்டு காலமாக அவரது சகோதரி வினிதா செவிலியராக சவுதி அரேபியாவில் பணிபுரிந்து வந்த நிலையில்

கடந்த மூன்று ஆண்டுகளாக தனது சகோதரனை நான் பார்க்கவே இல்லை என்றும் தற்போது தனக்கு திருமணத்திற்கு வரன் பார்ப்பதற்காக சொந்த ஊருக்கு வந்துள்ள நிலையில் கடைசிவரை தனது சகோதரனை பார்க்கவே முடியாமல் சென்று விட்டது என வேதனை தெரிவிக்கிறார். மேலும் சிங்கப்பூரில் மின்னல் தாக்கி உயிரிழந்த இளைஞர் செந்தூரன் உடலை மீட்டுக் தாயகம் கொண்டு வர தமிழ்நாடு அரசும் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி உறுப்பினரும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சருமான மெய்யநாதன் ஆகியோர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் அதோடு இளைஞரின் குடும்பத்தினருக்கு போதிய உதவிகளை செய்ய வேண்டும் என கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

### வாணியம்பாடி அருகே

# பள்ளி வேனில் சிக்கி ஒன்றரை வயது குழந்தை பலி!

வாணியம்பாடி, நவ.20

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த காவலூர் கிருஷ்ணாபுரம் பகுதியைச் சேர்ந்த வேலு திலகவதி தம்பதியர். இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் மற்றும் ஒன்றரை வயதில் துருசாந்த் என்ற மகன் என மூன்று குழந்தைகள் உள்ளனர்.



இதில் இரண்டு பெண் குழந்தைகள் சத்திரம் பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் படித்து வருகின்றனர்.

அவர்களை பள்ளி வேனில் ஏற்றுவதற்காக தாய் திலகவதி, சென்றுள்ளார்.

அப்போது எதிர்பாராத விதமாக குழந்தை துர்சாந்த் தாய்க்கு பின்னால் சென்று பள்ளிப் வேனில் சிக்கி உயிரிழந்துளான்.

ஓட்டுநர் பள்ளி வேனில் இடது பக்கத்தில் மாணவர்கள் ஏறி விட்டனரா என கவனித்து வேனை இயக்கிய நிலையில் வலது பக்கத்தில் குழந்தை இருப்பதை அறியாமல் வேனை இயக்கிய போது இந்த விபத்து நிகழ்ந்ததாக கூறப்படுகிறது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு காவலூர் போலீஸார் விரைந்து சென்று குழந்தையின் சடலத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

ஒன்றரைவயதுகுழந்தை தாய் மற்றும் தன் சகோதரிகள் கண் முன்னே பள்ளி வேனில் சிக்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சேகத்தை ஏற்படுத்தியுள்ளது.



விழுப்புரம் மாவட்டம், முண்டியம்பாக்கம் இரயில் நிலையத்திற்கு, தூத்துக்குடி இரயில் நிலையத்திலிருந்து சரக்கு இரயில் மூலம் வந்தடைந்த SPIC நிறுவன உர மூட்டைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் வேளாண் இணை இயக்குநர் சீனிவாசன், துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி.கதிர் செல்வி, உதவி இயக்குநர் (தகவல் மற்றும் தரக்கட்டுபாடு) திரு.விஜயகுமார் உட்பட பலர் உள்ளனர்.

### அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் மூலம்

# தருமபுரியில் நான்கரை ஆண்டுகளில் ரூ.10.92 கோடி மானியம் விநியோகம்!

## கலெக்டர் சதீஸ் தகவல்!!

தருமபுரிநவ.20

தருமபுரி மாவட்டத்தில் நான்கரை ஆண்டுகளில் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் ரூ.10.92 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் சதீஸ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் விவசாயம், அரசு வேலை, தனியார் நிறுவனங்களில் வேலை செய்தல் என்ற அளவிலேயே இருப்பதை மாற்றி தொழில்முனைவோர்களாக உருவாக்கவும், பலருக்கு வேலை வாய்ப்பை அளிக்கவும், அவர்கள் ஒருங்கிணைந்து முன்னேற்ற பாதையில் செல்லவும் இந்திய அளவில் முதன்மையான திட்டமாக அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் தொடங்கப்பட்டது.

கடந்தாண்டு, மிக குறுகிய காலத்திலேயே இத்திட்டத்தின் மூலம் மாநிலம் முழுவதும் பயனாளிகளுக்கு வங்கிகளால் கடன் ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

மேலும், இணைய வழியாக நிதி மேலாண்மை, வர்த்தக யுக்திகள், வரவு செலவு மேலாண்மை போன்ற தலைப்புகளின் கீழ் 10 நாள் தொழில்முனைவு பயிற்சி தொழில் முனைவோர் மேம்பாட்டு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் வழங்கப்பட்டு தொழில் முனைவோர்களுக்கு அரசின் மானியமும் வழங்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் நான்கரை ஆண்டுகளில் 66 நபர்களுக்கு ரூ.10 ரூ.10 கோடியே 92 லட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### நாஷா முக்த் பாரத் அபியான்

# திட்டத்தின் கீழ் போதை பொருள் பயன்பாட்டிற்கு எதிரான விழிப்புணர்வு!

## கலெக்டர் தலைமையில் நடைபெற்றது!!

திருப்பத்தூர். நவ.20

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகத்தின் மூலமாக நாஷாமுத் பாரத் அபியன் எனும் திட்டத்தின் ஐந்தாம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ் செயல்படும்திருப்பத்தூர்,மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் மூலம்.என் எதிர்காலம், என் தேர்வு – போதைப்பொருள் வேண்டாம்" என்ற தலைப்பின் கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சிவசௌந்தரவல்லி தலைமையில் அரசு துறை அலுவலர்கள், கல்லூரி மாணவ மாணவிகள், தன்னார்வலர்கள், அடங்கிய சுமார் 200 பேர் கலந்துக் கொண்டு நிகழ்ச்சியில் போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர். மேலும் போதை பொருள்இல்லாதசூழலை உருவாக்க வேண்டியது அவசியம் மற்றும் போதைப் பொருளினால் ஏற்படும் தீமைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட அரசு மனநல மருத்துவர்ஹரிதாமாணவ மாணவிகளிடையே உரையாற்றினர். தொடர்ந்து மாணவ மாணவிகளிடம் கலந்துரையாடியமாவட்ட ஆட்சியர்... மாணவர்கள் அனைவரும் உயர்கல்வியுடன் நின்று விடாமல் கட்டாயம் வேலைகளுக்கு சென்று அவர்களது பொறுப்பை உணர்ந்து நல்வழியில் நடக்க வேண்டிய தன் அவசியம் குறித்தும் போதைப்பொருள் உள்ளிட்ட தேவையற்ற பழக்கங்களில் ஈடுபடாமல் நண்பர்களுடன் பழகினாலும் உங்களது உற்ற நண்பனாய் நல்ல புத்தகங்களை தேர்ந்தெடுங்கள். நல்ல புத்தகங்கள் மட்டுமே உங்களை உண்மையான நல்வழியில் அழைத்துச் சென்று வாழ்வில் உங்கள் குறிக்கோளை அடைய உறுதுணையாக இருக்கும். படிப்பு வேலை போன்ற நற்சிந்தனைகளில் குறிக்கோளை வைத்து தேவையற்ற பழக்கங்களில் சென்று விடக்கூடாது என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்புஅலுவலர்(பொ) ஜெயகமல், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் முத்துக்குமார் மற்றும் மனநல மருத்துவர் ஹரிதா மற்றும் அரசு துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# "பந்தன் மியூச்சுவல் ஃபண்ட் - யூபிஐ மூலம் 5 லட்சம் வரை முதலீடு செய்ய வசதி"!

25 YEARS Bandhan AMC

சென்னை, நவ.20

பந்தன் மியூச்சுவல் ஃபண்ட், என்பிசிஐ (NPCI) சமீபத்தில் யூபிஐ பரிவர்த்தனை வரம்பை ஒரு பரிவர்த்தனைக்கு ₹1 லட்சத்திலிருந்து ₹5 லட்சமாக உயர்த்தியதைத் தொடர்ந்து, மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகளுக்கான அதிக மதிப்புள்ள யூபிஐ பரிவர்த்தனைகளை செயல்படுத்தியுள்ளது. இந்த மேம்பாட்டின் மூலம், யூபிஐ வழங்கும் அதே எளிமையும் வேகத்துடனும் முதலீட்டாளர்கள் இப்போது அதிக தொகைகளை முதலீடு செய்ய முடியும்.

பந்தன் மியூச்சுவல் ஃபண்டில், உயர்த்தப்பட்ட இந்த வரம்பு தற்போது அதன் டிஜிட்டல் தளங்களில் நடைபெறும் முதலீட்டாளர் பரிவர்த்தனைகளில் 90% க்கும் அதிகமானவற்றை உள்ளடக்கும். முதலீட்டாளர்கள், தங்களது வங்கி இந்த உயர்வான யூபிஐ வரம்பை செயல்படுத்தியிருப்பின், பந்தன் மியூச்சுவல் ஃபண்டின் இணையதளம் மற்றும் செயலி மூலம் நேரடியாக யூபிஐ வழியாக ₹5 லட்சம் வரை முதலீடு செய்யலாம்.

இந்த வசதி ஏற்கனவே முக்கிய வங்கிகளில், உட்பட HDFC வங்கி, பஞ்சாப் நேஷனல் வங்கி, ஆக்சிஸ் வங்கி, ஏர்டெல் பேமெண்ட்ஸ் வங்கி, பெடரல் வங்கி, யெஸ் வங்கி, IDFC வங்கி, AU ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி, ஜியோ பேமெண்ட்ஸ் வங்கி மற்றும் உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி ஆகியவற்றில் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. இதனால் முதலீட்டாளர்கள் தடையில்லாமல், விரைவாக முதலீடு செய்யக்கூடிய சிறந்த அனுபவத்தை பெறுகின்றனர்.

# பழைய ஓய்வு திட்டத்தை அமல்படுத்துவேன் என கூறி ஓட்டு வாங்குனீங்க? ஆனால் அமுல்படுத்தவில்லை!

## அடுத்த முறை ஆட்சி மாறும் முதல்வருக்கு ஜாக்டோ ஜியோ அமைப்பினர் எச்சரிக்கை!!




திருப்பத்தூர் நவ.20

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த சிவராஜ் லாட்ஜ் அருகில் ஜாக்டோ ஜியோ அமைப்பினர் அதாவது அரசு பள்ளிகள், மற்றும் கல்லூரிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அரசு பணியாளர்கள், உள்ளிட்டோர் பழைய ஓய்வு திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என கூறி பத்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்த மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு நாவுக்கரசு

முன்னதாக தேர்தல் நேரத்தில் தற்போதைய தமிழக முதல்வர் ஸ்டாலின் ஓட்டு கேட்கும் பொழுது அரசு ஊழியர்கள் தங்களுக்கு ஓட்டு போட்டால் பழைய ஓய்வு ஊதிய திட்டத்தை அமல்படுத்தவேன் எனக் கூறினார் ஆனால் தற்போது வரை அந்த திட்டத்தை அமல்படுத்தவில்லை இன்னும் ஆறு மாத காலத்தில் தேர்தல் நெருங்குகிறது.

உடனடியாக பழைய ஓய்வு திட்டத்தை அமல்படுத்தவில்லை என்றால் அடுத்த முறை கண்டிப்பாக ஆட்சி மாற்றம் ஏற்படும் என கூறினார். இந்தப் போராட்டத்தில் சுமார் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழக அரசுக்கு எதிராக

# ஜாக்டோ ஜியோ சார்பில் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டம்!




கிருஷ்ணகிரி நவ.20

10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக முழுவதும் இன்று ஜாக்டோ ஜியோ சார்பில் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் போராட்டம் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே அண்ணா சிலை முன்பு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டமைப்பான ஜாக்டோ ஜியோ சார்பில் தற்போது கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது. மேலும், இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்று 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பி, பழைய ஓய்வு திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும், பல்வேறு அரசு துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தற்போது கண்டன கோஷங்களை எழுப்பியவாறு ஜாக்டோ ஜியோ அமைப்பினர் தற்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



### காரிமங்கலம் மருத்துவமனையில்

# யோகா மற்றும் இயற்கை மருத்துவர் தினம் கொண்டாட்டம்!

தருமபுரி நவ.20

தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் வட்டாரத்திற்கு உட்பட்ட காரிமங்கலம் மருத்துவமனையில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ பிரிவில் இயற்கை மருத்துவர் தினம் வட்டார மருத்துவ அலுவலர் அனுராதா தலைமையில் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் இயற்கை உணவு கண்காட்சி பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

மேலும் முளைகட்டி தானியங்கள், பழச்சாறு வகைகள், நெருப்பு இல்லாமல் சமையல் முறைகள் பற்றியும்,அதன் சிறப்பு அம்சங்கள் பற்றியும் யோகா மற்றும் இயற்கை மருத்துவர் சுமதி விளக்கம் அளித்தார்.

மேலும் யோகா பயிற்சி செய்வதால் பெண்களுக்கும்,பொது மக்களுக்கும் ஏற்படும் பயன்பாடுகள் பற்றியும், நடைப்பயிற்சி செய்வதால் கிடைக்கும் நன்மைகள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் சித்த மருத்துவர் முத்துக்குமார்,பல் மருத்துவர் கார்த்திகேயன் , மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் மாவட்டத்தில்

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நடத்தும் வேலைவாய்ப்பு முகாம்!

விழுப்புரம்நவ.20

விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நடத்தும் வேலைவாய்ப்பு முகாம் (ம) இளைஞர்திறன் திருவிழா 22.11.2025 சனிக்கிழமை அன்று புளித அன்னாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திண்டிவனத்தில் 09.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடத்தப்பட உள்ளது.

வேலைவாய்ப்பு முகாம் (ம) இளைஞர்திறன் திருவிழாவில் 100க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் மற்றும் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொள்கின்றன. எனவே, விழுப்புரம் மாவட்டத்தை சார்ந்த படித்த வேலைவாய்ப்பற்ற கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களை சார்ந்த இளைஞர்கள் கலந்து கொண்டு தங்களுக்கு ஏற்ற பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பினை தேர்வு செய்யலாம்.

இந்தமாபெரும்வேலை வாய்ப்பு முகாம் (ம) இளைஞர்திறன் திருவிழா தொடர்பாக மேலும் விபரங்களை அறிய ஊரகப் பகுதிகளில் சம்பந்தப்பட்ட வட்டார இயக்க மேலாணமை அலகு, ஊராட்சி அளவில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு. நகர்ப்புறப் பகுதிகளில் சம்பந்தப்பட்ட நகராட்சி அலுவலகம் மற்றும் பேரூராட்சி அலுவலகங்களை தொடர்பு கொண்டு விபரம் பெற்று கொள்ளலாம்.

வேலைவாய்ப்பு முகாம் (ம) இளைஞர்திறன் திருவிழாவில் கலந்து கொள்ளும் இளைஞர்கள் தங்களது அனைத்து கல்வி சான்றிதழ்கள் அசல் மற்றும்நகல்,குடும்பஅட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல், பாஸ்போர்ட் சைஸ் புகைப்படங்கள்2 ஆகியவற்றுடன் முகாமில் கலந்துக்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

வேலைவாய்ப்பு முகாம் (ம) இளைஞர்திறன் திருவிழாவில் கலந்து கொள்ளும் ஆண்கள்/பெண்கள் கீழ்காணும் வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு 18 முதல் 40 வரை உள்ள ஆண்/பெண் (இருபாலரும்) கல்வித் தகுதி 8ம் வகுப்பு முதல் முதுகலை பட்டப்படிப்பு வரை வேலைவாய்ப்பு முகாம் (ம) இளைஞர்திறன் திருவிழா தொடர்பாக மேலும் விபரம் அறிய அனைத்துவட்டாரஇயக்க மேலாண்மை அலகு மற்றும் விழுப்புரம் மகளிர் திட்ட அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் 6T60T மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



விழுப்புரம் மாவட்டம் 71 மயிலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மயிலம் ஊராட்சி ஒன்றியம் கொல்லியங்குணம் ஊராட்சியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்த பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மயிலம் வாக்காளர் பதிவு அலுவலர் முகுந்தன், துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி.கதிர் செல்வி உட்பட பலர் உள்ளனர்.



அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையங்களுக்கு, கொள்முதல் செய்யப்பட்ட மீட்பு உபகரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, தீயணைப்பு மீட்புப் பணிகள் துறைக்கு வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஸ்வேஷ் பாலசுப்ரமணியம் சாஸ்திரி, மற்றும் பலர் உள்ளனர்.

### ஆம்பூரில் வாக்காளர் திருத்தச் சட்டத்தை கண்டித்து

# மனிதநேய ஜனநாயக கட்சி ரயில் மறியல் போராட்டம்!

## போலீசாருடன் தள்ளுமுள்ளு; கடும் வாக்குவாதம்!!




வாணியம்பாடி,நவ.20

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் வாக்காளர் சிறப்பு திருதத்தை கண்டித்தும் அதனை வாபஸ் பெற வலியுறுத்தி ரயில் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் மனிதநேய ஜனநாயக கட்சியினர், விடுதலை சிறுத்தைகள் கட்சியினர், த.மு.மு.க, AIMIM, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த சுமார் 100க்கும் மேற்பட்டோர், வாக்காளர் சிறப்பு திருத்தத்தை ரத்து செய்யக் கோரியும், இதனை கொண்டு வந்துள்ள தேர்தல் ஆணையையும், மத்திய அரசையும் கண்டித்தும், கண்டன கோஷங்களை எழுப்பி ரயில் நிலைய முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.அப்போது போராட்டகாரர்கள் அத்துமீறி ரயில் நிலையத்திற்குள் நுழைய முயன்றதால் காவல்

துறையினருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் மற்றும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

பின்னர் காவல் துறையினர் அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

இ தன் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சியாமளா தேவி தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் முன்கூட்டியே பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு, ரயில் நிலையம் முழுவதும் காவல்துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது.

இதனால் அப்பகுதியில் சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக பரபரப்பான சூழல் நிலவியது.



விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டத்திலுள்ள பிளவக்கல் பெரியாறு மற்றும் கோவிலாறு, அணைகளிலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் என்.ஓகபுத்ரா, ர்கள் மற்றும் சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் ஜி.அசோகன் முன்னிலையில், வருவாய் மற்றும் பேரிடர்மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் ) நீர் பாசனத்திற்காக தண்ணீரினை திறந்து வைத்தார்.

### தேன்கனிக்கோட்டை அருகே நெடுஞ்சாலையில்

# ஒய்யாரமாக கடந்து சென்ற காட்டு யானை!

ஓசூர்,நவ.20

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக் கோட்டை அடுத்துள்ள மரக்கட்டா வனப்பகுதியில் ஏராளமான காட்டு யானைகள் முகாமிட்டுள்ளன. இந்த காட்டு யானைகள் கூட்டத்தில் இருந்து வெளியேறி வந்த ஒற்றை காட்டு யானை தேன்கனிக் கோட்டை அஞ்செட்டி சாலையில் அதிகாலையில் ஒய்யாரமாக கடந்து சென்றது. காட்டு யானை சாலையை கடந்ததால் அந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள் அதிர்ச்சி அடைந்து அங்கேயே நீண்ட நேரம் நின்றனர். காட்டு யானையானது அங்கு நின்ற வாகன ஓட்டிகள் பொதுமக்கள் என யாரையும் தொந்தரவு படுத்தாமல் ஒரு புறத்திலிருந்து மறுபுற வனப்பகுதிக்கு கடந்து சென்றது இதனால் அதிர்ச்சியில் இருந்து மீண்ட வாகன ஓட்டிகள் அங்கிருந்து வாகனங்களில் தங்களது பயணத்தை தொடர்ந்தனர்.



### எஸ்கார்ட்ஸ் குபோடா லிமிடெட்

# இந்தியாவில் மூன்றாம் தலைமுறை RideOn Rice நடவு இயந்திரங்களை அறிமுகப்படுத்தியது!

சென்னை நவ.20

வேளாண் மற்றும் கட்டுமான உபகரணத் துறையில் முன்னணியில் இருக்கும்எஸ்கார்ட்ஸ்குபோடா லிமிடெட் (EKL), தனது குபோடா பிராண்டின் கீழ் KA6 மற்றும் KA8 ஆகிய மூன்றாம் தலைமுறை Ride On Rice நெல் நடவு இயந்திரங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. ஜப்பானில் வடிவமைக்கப்பட்ட இந்த மாடல்கள் மேம்பட்ட தொழில்நுட்பம், உயர் உற்பத்தித்திறன், இயக்குபவரின் சௌகரியம் மற்றும் துல்லியமான நடவு திறன் ஆகியவற்றை ஒருங்கிணைக்கின்றன. தமிழ்நாடு, பஞ்சாப், ஒடிசா, மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், கேரளா, தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் இவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

KA6 மற்றும் KA8 இயந்திரங்கள் குபோடாவின் எரிபொருள் சிக்கன என்ஜின்களில் இயங்குகின்றன. முறையே 21 மற்றும் 24 குதிரைத்திறன் சக்தியைக் கொண்டு கடினமானவயல்சூழல்களிலும் சிறப்பான செயல்திறன்



வழங்குகின்றன. தானியங்கி தூக்கும் வசதி, திறன் மிக்க திருப்பும் அமைப்பு, சீரான நடவு ஆழத்திற்கான கட்டுப்பாடு, மற்றும் மேம்படுத்தப்பட்டநாற்று வழிகாட்டி உள்ளிட்ட அம்சங்கள் மூலம் நடவு துல்லியம் மற்றும் விளைச்சல் நிலைத்தன்மை மேம்படுகின்றன. இயக்குபவரின் சௌகரியத்தை கருத்தில் கொண்டு பரந்த தளம், எர்கோனாமிக் வடிவமைப்பு மற்றும் LED விளக்குகளும் வழங்கப்பட்டுள்ளன.

பேச்சாளர் – திரு. பாரத் மதன், CFO மற்றும் முழுநேர இயக்குநர், "இந்த KA தொடரின் நடவு இயந்திரங்கள், கடின உழைப்புக்கேற்ப பட்ட நெல் நடவு செயல்முறையை துல்லியமும் சௌகரியமும் கொண்ட நவீன முறையாக மாற்றும் முக்கிய முன்னேற்றம்," என்று தெரிவித்தார்.

### ஒன்பிளஸ் 15 அறிமுகம்:

# மிகச்சிறந்த செயல்திறன், மேம்பட்ட கேமரா மற்றும் அதிநவீன AI அனுபவம்!




சென்னை, நவ.20

உலகளாவிய தொழில்நுட்ப பிராண்டான ஒன்பிளஸ், புதிய தலைமுறை ஃபிளாக்ஷிப் ஸ்மார்ட்ஃபோனான ஒன்பிளஸ் 15ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. நவீன டிரிப்பிள்சிப் கட்டமைப்பு, Snapdragon® 8 Elite Gen 5 பிளாட்ஃபார்ம், 1.5K 165Hz LTPO டிஸ்பிளே, 7300mAh சிலிக்கான் நானோஸ்டாக் பேட்டரி உள்ளிட்ட பல முன்னணி அம்சங்களுடன், இது மிக வேகமான, மென்மையான மற்றும் உயர் செயல்திறன்வழங்கும்ஸ்மார்ட்ஃபோனாக திகழ்கிறது. தொழில்துறையின் மிக சக்திவாய்ந்த கேமரா அமைப்புகளில் ஒன்றான 50MP டிரிப்பிள் கேமரா மற்றும் மேம்பட்ட AI அடிப்படையிலான OxygeneOS 16 ஆகியவை பயனர்களின் அன்றாட அனுபவத்தை மேலோங்கச்செய்கின்றன. அறிமுகத்தையொட்டி, ஒன்பிளஸ் இந்தியாவின் தலைமை நிர்வாக அதிகாரி ராபின் லியு கூறியதாவது:

"பயனர்கள் எல்லைகளைத் தாண்டிச் செல்ல உதவும் மிகச்சிறந்த செயல்திறன் கொண்ட சாதனங்களை உருவாக்குவதே எங்கள் நோக்கம். ஒன்பிளஸ் 15 அந்த இலக்கின் உச்சம். வேகம், மென்மை மற்றும் சக்தியைக் கொண்ட இந்த ஸ்மார்ட்ஃபோன் பயனர்களுக்கு ஒரு புதிய அளவுகோல் அனுபவத்தை வழங்குகிறது."

ஒன்பிளஸ் 15 இன் விலை INR 72,999 முதல் தொடங்குகிறது. இது நவம்பர் 13 முதல் ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன் விற்பனை மையங்களில் கிடைக்கிறது. வங்கித் தள்ளுபடிகள், எக்சேஞ்ச் சலுகைகள், EMI வாய்ப்புகள், இலவச One Plus Nord Buds 3 மற்றும் பல சிறப்பு நன்மைகள் இந்த அறிமுகத்தை மேலும் அதிக மதிப்புடையதாக்குகின்றன.



### சேலத்தில் மனித, வன உயிரின மோதல்:

# வனத்துறை சார்பில் ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்பு!

## அமைச்சர் இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!!

சேலம்,நவ.20

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மனித வனஉயிரின மோதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் வனத்துறை சார்பில் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பினை சேலம், மணக்காடு, காமராஜர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, முன்னிலையில் தொடங்கி வைத்தார்கள். பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் வன உரிமைகளைப் பாதுகாத்திடவும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனடிப்படையில் மனித வனஉயிரின மோதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் வனத்துறை சார்பில் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்றையதினம் தொட ங்கி வைக்கப்படுகிறது.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் அரசாணையின்படி தமிழ்நாடு முழுவதும் 20,000 பள்ளி மாணவ மாணவியர்களுக்கு வனப்பாதுகாப்பு, வனஉயிரின கனக்கெடுப்பு, வனத்தீ மேலாண்மை மற்றும் மனித வன உயிரின மோதல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன்தமிழ்நாடு முழுவதும்11 ஆம் வகுப்பு அரசு பள்ளி மாணவ மாணவியர்களுக்கு 20,000 நபர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சி வகுப்பில் காடுகள், காட்டுயிர்கள் பாதுகாப்பு சவால்களும் தீர்வுகளும், வனப்பாதுகாப்பு, காட்டுத்தீ மேலாண்மை, காட்டுயிர்கள் கணக்கெடுப்பு உள்ளிட்ட தலைப்பில் வகுப்புகள் எடுக்கப்படுகிறது.

சென்னைமாவட்டத்தில்1,500மாணவ, மாணவியர்களும், இதர 37 மாவட்டத்தில் 500 மாணவ மாணவியர்கள் வீதம் மொத்தம் 18,500 மாணவ மாணவியர்கள் ஆக மொத்தம் 20,000 மாணவ மாணவியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளித்து வனம் மற்றும் வனஉயிரின பாதுகாப்பு வல்லுநர்களாக உருவாக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சேலம் மாவட்டத்தில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க 25 ஆசிரியர்களை தேர்வு செய்துஒவ்வொருஆசிரியரும்20மாணவ, மாணவியர்களுக்கு பயிற்சி அளித்து குழந்தைகளை வனம் மற்றும் வனஉயிரின பாதுகாப்பு வல்லுநர்களாக உருவாக்கப்பட உள்ளது.

இத்திட்டத்தின் தொடக்கமாக சேலம் மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட 25 ஆசிரியர்களுக்கு 17.11.2025 முதல் 18.11.2025 ஆகிய இரண்டு நாட்கள் தொடர்ந்து பயிற்சி அளித்து பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்தேர்வுசெய்யப்பட்டமாணவ மாணவியர்களுக்கு ஒரு மாத காலம் பயிற்சி அளித்தும் மாணவ, மாணவியர்கள் கற்றல் திறன் அறிந்து வனம் மற்றும் வனஉயிரின பாதுகாப்பு வல்லுநர்களாக உருவாக்கப்படுவார்கள்.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக வனத்துறை சார்பில் மனித வன உயிரின மோதல் குறித்தான விழிப்புணர்வு கையேட்டினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆசிரியர்களுக்கு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர்டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், மாவட்ட வன அலுவலர் கஷ்யப் ஷஷாங் ரவி, சேலம் ஓமலூர் சமூக காடுகள் வனச்சரக அலுவலர் திருமதி ரா.வீரமணி, உயிரியலாளர் முனைவர் இரா.பிரவீன்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### மீனவ சமுதாயத்தைச் சார்ந்த

# பட்டதாரி இளைஞர்கள் இந்திய குடிமைப்பணிகளில் சேர ஆயத்த பயிற்சி!

## கலெக்டர் தகவல்!!

விழுப்புரம்நவ.20

மீனவ சமுதாயத்தைச் சார்ந்த பட்டதாரி இளைஞர்கள் இந்திய குடிமைப் பணிகளில் சேருவதற்கான போட்டித் தேர்வில் சிறப்பிக்க ஆயத்த பயிற்சி அளித்தல் தொடர்பாக மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தம்) அவர்கள் 11.07.2017 அன்று சட்டபேரவையில் அறிவித்தபடி, சென்னை அகில இந்தியகுடிமைப்பணிபயிற்சி மையத்துடன் மீன்வளம் மற்றும்மீனவர்நலத்துறை இணைந்து ஆண்டுதோறும் 20 கடல் மற்றும் உள்நாட்டு மீனவ பட்டதாரி இளைஞர்களை தேர்ந்தெடுத்து தனிக்குழுவாக அமைத்து அவர்களுக்கு இந்திய குடிமை ப்பணிக்கான போட்டித் தேர்வில் கலந்து கொள்ள ஏதுவாக பிரத்யேக பயிற்சி அளித்திடும் ஒரு புதிய திட்டத்தினை செயல்படுத்திட தமிழ்நாடு அரசு ஆணை வழங்கியுள்ளது. கடல் மற்றும் உள்நாட்டு மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் மீனவர் நலவாரிய உறுப்பினர்களின் வாரிசு பட்டதாரி இளைஞர்கள் இப்பயிற்சி திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற விரும்புவோர்விண்ணப்ப படிவம் (Application Form) மற்றும் அரசு வழிகாட்டு நெறிமுறைகளை (Guide lines) மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் www.fisheries.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது விண்ணப்ப படிவங்களை விழுப்புரம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகங்களில் அலுவலக வேலை நாட்களில் விலையின்றி பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பதாரர் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் இணையதளத்தில் உள்ள அரசு வழிகாட்டு நெறிமுறைகளின் படி பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் உதவி இயக்குநர் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அலுவலகம், 62/56A, தாட்கோ அலுவலக வளாகம், அரசு மருத்துவமனை சாலை, அரசு மருத்துவமனை எதிரில், விழுப்புரம்605 602 என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 25.11.2025 பிற்பகல் 5.00 மணிக்குள்விண்ணப்பிக்க வேண்டும். மேலும், இத்திட்டம் குறித்த கூடுதல் விவரங்களுக்கு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், விழுப்புரம் (தொலைபேசி எண்.04146 259329) அலுவலகத்தை நேரில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



கடலூர் மாவட்டத்திற்குட்பட்ட விருத்தாசலம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்கள் கூடுதல் பணியாளர்கள் மூலம் தேர்தல் ஆணைய இணையத்தில் பதிவேற்றம் செய்யும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



## பிரதமர் வருகையையொட்டி கோவையில் போலீசாரின் பாதுகாப்பு ஒத்திகை!

கோவை,நவ,20–

தென் இந்திய இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பு சார்பில் கோவை அவிநாசி சாலையில் உள்ள கொடிசியா வளாகத்தில் நடைபெற உள்ள இயற்கை விவசாயிகள் மாநாடு இன்று துவங்கி மூன்று நாள் நடைபெற உள்ள இந்த மாநாட்டை பிரதமர் மோடி துவக்கி வைக்க உள்ளார்.

தனி விமானத்தில் புறப்படும் பிரதமர், மதியம் 1.30 மணிக்கு கோவை விமான நிலையம் வந்தடைவார் என அறிவிக்கப் பட்டுள்ளது.பிரதமர் வருகையைமுன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளை பரிசீலிக்க மாநகர காவல் துறை ஆணையர் அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் உயர் அதிகாரிகள் அனைவரும் கலந்து கொண்டு பா து காப்பு பணிகள், வழித்தடங்கள், பொது மக்கள் நடமாட்டம் உள்ளிட்ட விடயங்களை ஆய்வு செய்த னர்.இதையடுத்து, விமானநிலையத்தி லிருந்து கொடிசியா வளாகம் வரைபிரதமரின்கான்வாய் செல்லும் வழித்தடத்தில் பாதுகாப்பு ஒத்திகை மேற்கொள்ளப்பட்டது. துப்பாக்கியுடன் கூடிய போலீசார் இருபுறமும் நிறுத்தப்பட்டு பாதுகாப்பு நிலையைச் சோதித்தனர்.

ஒத்திகை காரணமாக அவினாசி சாலையில் சிறிது நேரம் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டு சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது.



ஆறுபடை மருத்துவக் கல்லூரி & மருத்துவமனை ரோட்டரி கிளப் நெய்வேலி கிரின் சிட்டி ஜோதி மாற்றுத்திறனாளிகள் சமூக நல அறக்கட்டளை இணைந்து நடத்திய இலவச கண்சிகிச்சைபொதுநலமருத்துவம்புற்றுநோய்கண்டறிதல்மருத்துவமுகாம்நடைபெற்றது. நிகழ்ச்சியில் அனைவரையும் வரவேற்பு சி குமார் நிறுவனர் ஜோதி மாற்றுத்திறனாளிகள் சமூக நல அறக்கட்டளை தலைமை ரோட்டரி தலைவர் எஸ் ஆர் கிருஷ்ணகுமார் ரோட்டரி செயலாளர் ஏ சுரேந்திரன் ரோட்டரி பொருளாளர் எ சுந்தர் ரோட்டரி வி. சுரேஷ் பாபு ரோட்டரி மோகன் டாக்டர் செல்வகுமார் ஆர்கனைசர் ஜெயந்தி தமிழ்வேந்தன் நன்றியுரை ஏ பிளாக் மாற்றுகுடியிருப்புபுதுமைசந்தானம்சாமுண்டீஸ்வரிடிஎம்டிநலச்சங்கம்ஒருங்கிணைப்பாளர் அருண் மற்றும் ஜோதி கமலி லதா கலந்து கொண்டு சிறப்பித்தனர்

### கோவையில் தடுப்புச்சுவரில் இடித்து

## தாறுமாறாக ஓடிய கார் மோதி ஐ.டி. ஊழியர் பலி!

### தம்பதி உள்பட 4 பேர் படுகாயம்!!

கோவை, நவ.20–

நாகப்பட்டினம் மாவட்டம் மணப்பந்தல் அருகே மூங்கில் தோட் டத்தை சேர்ந்தவர் மணிகண்டன் (வயது 32). இவர் கோவை சரவணம்பட்டி பகுதியில் நண்பர்களுடன் அறை எடுத்து தங்கி ஐ.டி. நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார்.

சம்பவத்தன்று இரவு மணிகண்டன், அவரது நண்பர்கள் அஜித் குமார் (28), சரவணம்பட்டியை சேர்ந்த விமல்ராஜ் ஆகியோருடன் கோவை சத்தி சாலையில் ஒரு ஓட்டலுக்கு சென்றார்.

பின்னர் அவர்கள், சர்வீஸ் ரோட் டில் உள்ள பழமுதிர் நிலை யம் எதிரே நடந்து வந்து கொண்டு இருந்தனர்.அப் போது அந்த வழியாககார் திடீரென கட்டுப் பாட்டை இழந்து சாலையை கடக்க நின்று கொண்டு இருந்த சரவணம்பட்டியை சேர்ந்த தம்பதிகளான கார்த்தி (30), காயத்ரி (27) ஆகியோர் மீது உரசியபடி சென்றது.

இதில்அவர்கள்2பேரும்நிலைதடுமாறி கீழே விழுந்தனர். இதில் கார்த்திக்கு லேசான காயம் ஏற்பட்டது.காயத்ரி படு காயம் அடைந்தார். அதன்பிறகும் அந்த கார் நிற்காமல் கட்டுப்பாட்டை இழந்து தடுப் புச்சுவரில் மோதி சாலையின் மற்றொரு பகுதிக்கு பாய்ந்து, அங்கு நடந்து சென்ற மணிகண்டன், விமல்ராஜ், அஜித் குமார் ஆகியோர் மீது மோதியது. இதில் அவர்கள் 3பேரும் தூக்கி வீசப்பட்டு படு காயம் அடைந்த னர். இது போல் காரை ஓட்டிவந்தவாலிபரும்படுகாயம்அடைந்தார் இதுகுறித்த தகவலின் பேரில் கோவை கிழக்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். அவர்கள், விபத்தில் காயம் அடைந்த மணிகண்டன், விமல்ராஜ், அஜித்குமார், காரை ஓட்டி வந்த வாலிபர் மற்றும் காயத்ரி ஆகியோரை மீட்டு தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் செல்லும் வழியிலேயே மணிகண்டன் பரிதாபமாக இறந் தார். போலீசார் நடத்திய விசாரணை யில் காரை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியது



கோவை வடவள்ளி பேருந்து நிலையம் அருகில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்தை திரும்பப் பெற வலியுறுத்தி இந்திய ஒற்றுமை இயக்கத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## கிருஷ்ணகிரியில் கூட்டுறவு உதவியாளர், எழுத்தர் பணியிடங்களுக்கான நேர்முக தேர்வு!

### 26–ம் தேதி நடக்கிறது!!

கிருஷ்ணகிரி, நவ.20

இது குறித்து கிருஷ்ணகிரி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் நடராஜன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கிருஷ்ணகிரிமாவட்டத்தில்கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவு நிறுவனங்களில் காலியாகவுள்ள உதவியாளர் மற்றும் எழுத்தர் பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட் சேர்ப்பு நிலையம் சார்பில் கடந்த அக் டோபர் மாதம் 11ம் தேதி நடந்தது.

எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள், இட ஒதுக்கீடு மற்றும் சிறப்பு தகுதிகள் அடிப்படையில் நேர்முகத் தேர்வுக்கு தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டுள்ள தேர்வர்களின் விவரங்கள் கிருஷ்ணகிரி மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் http://www.drbkrishnagiri.net இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. நேர்முக தேர்வானது வருகிற 26ம் தேதி நடைபெற உள்ளது. மேலும், நேர்முகத் தேர்வுக்கு தற்காலிகமாக அனுமதிக்கப் பட்டுள்ள தேர்வர்கள் தங்களது நேர்முகத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டினை http://www.drbkrishnagiri.net என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

## எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைக்கு எதிராக குரல் கொடுக்க ஒன்றுனைவோம்!

### முன்னாள் காங்கிரஸ் தலைவர் எல். சுப்பிரமணியன் வேண்டுகோள்!



கிருஷ்ணகிரி,நவ.20

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட முன்னாள் காங்கிரஸ் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக் குழு உறுப்பினருமான எல் சுப்பிரமணியன் தனது செய்தி குறிப்பில் இந்தியாவின் இரும்பு மங்கையும், முன்னாள் பாரத பிரதமருமான அன்னை இந்திரா காந்தியின் பிறந்த இன்நன்னாளில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவியும், பாராளு மன்ற உறுப்பினருமான அன்னை சோனியா காந்தியின் நல்லாசியுடன்,

எங்களின் இதையத்தில் என்றும் குடியிருக்கும் காங்கிரஸ் கட்சியின் எழிச்சி நாயகனும், எங்களின் வருங்கால பாரத பிரதமரும், அன்பின் பிறப்பிடமும், ஆற்றலின் இருப்பிடமும், உள்ள எங்களது இளம்தலைவர் ராகுல் காந்தி எம்.பி. ஆசியோடு இன்று பிறந்த நாள் காணும், கிருஷ்ணகிரி காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் கே.கோபிநாத் எம்.பி. வாழ்த்துவதற்கு வயதில்லை என்றாலும் வணங்கி பல்லாண்டு காலம், வாழ்க, வாழ்க என இந்த பிறந்தநாளில் வாழ்த்துகிறோம் குறிப்பாக இந்த நன்நாளில் இந்திய தேர்தல் ஆணையம் கொண்டு வந்தள்ள எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைக்கு எதிராக குரல் கொடுக்க காங்கிரஸ் கட்சியினர் அனைவரும் ஒன்றுனைந்து குரல் கொடுப்போம் என்று தனது செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்

### பாப்பாரப்பட்டி அருகே

## வீட்டிலேயே பிரசவம்; பெண் சிசு திடீர் மரணம்!

பாப்பாரப்பட்டி, நவ.20

தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி அருகே உள்ள குண்டுகாரப்பள்ளம் கிராமத்தைச் சேர்ந்தவர் ரவி(41). இவர் திருப்பூரில் தங்கி பனியன் கம்பெனி யில் வேலை செய்து வருகிறார். இவரது மனைவி கல்பனா (36). இவர்களுக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில், கடந்தாண்டு கல்பனா வுக்கு 3வதாக பிறந்தபெண் குழந்தை இறந்து போனது. மீண்டும் கர்ப்பமான கல்பனாவுக்கு, கடந்த 16ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) இரவு திடீரென வலி ஏற்பட்டுவீட் டிலேயே பெண் குழந்தை பிறந்தது. ஆனால், கல்பனாவுக்கு அதிகப்படியான ரத்தப்போக்கு ஏற்பட்டது. மேலும், பெண் சிசுவுக்கும் உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதையடுத்து உறவினர்கள் கல்பனாவையும், பெண் சிசுவையும் மீட்டு தர்மபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை யில் சேர்த்தனர். அங்கு தாய் மற்றும் சிசுவுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. ஆனால், நேற்று சிகிச்சை பலனின்றி பெண் சிசு உயிரிழந்தது. கல்பனா வுக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப் பட்டு வருகிறது. இதுகுறித்து பிளியனூர் விஏஓ சரவணன், பாப்பாரப்பட்டி போலீசில் புகார் செய்தார். அதன் பேரில், போலீசார் வழக்குபதிவு செய்து பெண்சிசு மரணம் குறித்து விசாரணை நடத்திவருகின்றனர்.



சேலம் மாவட்டம் கெங்கவல்லி அரசு பள்ளி மாணவி காவியஸ்ரீ, மதுரையில் நடந்த கல்விக்கான மாரத்தானில், 5 கி. மீ., தூர போட்டியில் நான்காம் இடம் பிடித்து சாதனை படைத்தார். அவருக்கு, கெங்கவல்லி போலீஸ் இன்ஸ்பெக்டர்சாந்தி,நினைவுப்பரிசுவழங்கிபாராட்டினார்.



### மத்தூர் அருகே

## பேட்டரிகள் திருடிய 4 பேர் கைது!

ஊத்தங்கரை நவ .20

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் அருகே உள்ள ஜோகிப்பட்டி பகுதியில் தனியாருக்கு சொந்தமான செல்போன் கோபுரம் உள்ளன அதேபோல் மத்தூர் அருகே உள்ள பில்லகொட்டாய் பகுதியில் அதே நிறுவனத்தைச் சேர்ந்த செல்போன் கோபுரம்உள்ளதுஇதில்இரண்டு செல்போன் கோபுரங்களிலும்.2 .10.2025 ம் தேதி ஒரே நாளில் இரண்டு செல்போன் கோபுரங்களில் இருந்து 48 பேட்டரியில் மர்ம நபர்களால் திருடி சென்றுள்ளது தெரியவந்தது. இது குறித்து செல்போன் கோபுரங்களின் கண்காணிப்பாளர் காரிமங்கலம் அடுத்த பச்சனம்பட்டி பகுதியை சேர்ந்த குமரன் மத்தூர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் புகாரின் பேரில் மத்தூர் போலீசார் பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டு வந்தனர் வாகனத் தணிக்கையில் ஈடுபட்ட மத்தூர் போலீசார் கிருஷ்ணகிரியில் இருந்து மத்தூர் நோக்கி வந்த மினி லாரியை மத்தூர் அருகே உள்ள சுங்கச்சாவடி பகுதியில் தடுத்து நிறுத்தி சோதனைகள் ஈடுபட்டனர் .அப்போது போலீசார் நடத்திய விசாரணையில் மினாரில் வந்த நபர்கள் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை அளித்துள்ளனர். போலீசாரின் தீவிர விசாரணையில் தனியார் செல்போன் கோபுரங்களில் இருந்து 48 பேட்டரிகளை திருடியது தெரியவந்தது .

இதில் மாதேஷ் (34), முரளி (28), சூர்யா (23) ஆகிய 4 பேரை மத்தூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் பத்மாவதி போலீசார் கைது செய்தார் .

### ஓசூர் அருகே

## மதுக்கடையில் வாலிபர் முகம் சிதைத்து கொலை!



ஓசூர், நவ 20

விழுப்புரம் மாவட்டம் சோலாம்பூண்டியை சேர்ந்த வையாபுரி அவர்களின் மகன் பலராமன் ( 27) கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் பாகலூர் அட்கோ பகுதியில் உள்ள ஓட்டலில் வேலை செய்து வந்தார். இவர் மது அருந்தும் பழக்கம் கொண்டவர். நேற்றிரவு சி. எஸ். ஐ ரிங் ரோடு பகுதிக்கு அருகே, மாநில எல்லையில் அமைந்த கர்நாடக மாநில மது பான பாருக்கு சென்றார்.

அங்கு அமர்ந்து மது குடித்துக் கொண்டிருந்த போது, அவர் மற்றும் மற்றொரு குழுவினருக்கு இடையே தகராறு ஏற்பட்டது.

இதில் ஆத்திரமடைந்த கும்பல் ஒன்று சேர்ந்து பலராமனை கூட்டாக தாக்கியதால், பலராமன் ரத்த காயங்களுடன் வெளியே ஓட முயன்றார்.

ஆனால் அந்த கும்பல் விடாமல் விரட்டி, பார் வாசலுக்கு அருகே முகத்தில் கட்டையாலும் கல்லாலும் தாக்கி, பலராமன் முகத்தை சிதைத்துக் கொலை செய்து, உடலை அங்கேயே விட்டுவிட்டு சென்றனர்.

கொலை சம்பவத்தை அறிந்ததும், ஓசூர் சிப்காட் போலீசார் விரைந்து சம்பவ இடத்திற்கு சென்றனர். கொலை நடந்த இடம் அத்திப்பள்ளி போலீஸ் சரக எல்லையில் உள்ளதால், உடனடியாக கர்நாடக மாநில அத்திப்பள்ளி போலீசாருக்கும் தெரிவிக்கப்பட்டது. அவர்களும் அதிவேகமாக வந்து பிரேத பரிசோதனைக்காக பலராமனின் உடலை அத்திப்பள்ளி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பினர்.

பலராமனுக்கு அறிமுகமானவர்கள் இதில் ஈடுபட்டுள்ளாரா? அல்லது இந்த சம்பவத்திற்கு மற்றவர்களும் தொடர்புடையவர்களா என கர்நாடக போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த கொலை சம்பவம் ஓசூர் மற்றும் பிறபகுதியில் அதிக பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



## கிருஷ்ணகிரி நகர அ.தி.மு.க. சார்பில் பூத்கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

### எம்.எல்.ஏ.க்கள் கே.பி.முனுசாமி, அசோக்குமார் பங்கேற்றனர்!!

கிருஷ்ணகிரி, நவ.20,

கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரிஅதிமுக நகரகழகம் சார்பில் பூத்கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் பழைய பேட்டை தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட கழக செயலாளர் கே.அசோக்குமார் தலைமை தாங்கினார். நகர செயலாளர் கேசவன் வரவேற்று பேசினார்.நிகழ்ச்சியில் சேலம் மண்டல அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட செயலாளர் நிர்மல் ஆனந்த், இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர்கள் கே.பி. எம் சதீஷ்குமார், ராமு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட அவைத் தலைவர் காத்தவராயன்,முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் மனோரஞ்சிதம் நாகராஜ், மாவட்ட விவசாய அணி செயலாளர் மோகன்,மாவட்ட இளைஞரணி செயலாளர் கார்த்திக்,மாவட்ட மாணவர் அணி செயலாளர் ராகுல், மாவட்ட மகளிர் அணி செயலாளர் கல்பனா,நகர துணை செயலாளர் குரு,மாவட்ட பிரதிநிதி கோவிந்தராஜ், முன்னாள் மாவட்ட பேரவை செயலாளர் செல்வம்,நாகராஜ், பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் மகேந்திரன்,பெருமாள், தட்சிணாமூர்த்தி, துரை, மகேந்திரன், ஆனந்தன், மணி, ஆறுமுகம்,நெடுஞ்செழியன், கோவிந்தன், ஜெ ஜெ செந்தில் உட்பட அதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தொடர்ந்து 24நாட்களாக

## வனத்துறையினருக்கு போக்கு காட்டி வந்த சிறுத்தை கூண்டில் சிக்கியது!

### விவசாயிகள், பொதுமக்கள் நிம்மதி!!

ஆனைமலை,நவ.20–

கோவை மாவட்டம் ஆனைமலை அருகேயுள்ள. பாறைப்பதி, குப்புச்சிபுதூர் ஆகிய கிராமத்தின் பகுதியிலுள்ள விவசாய தோட்டங்களில் வளர்க்கப்பட்ட ஆடு, கன்றுக்குட்டி மற்றும் நாய் போன்றவற்றை மர்மவிலங்கு வேட்டையாடி சென்றதால் விவசாயிகளிடையே அச்சத்தை ஏற்படுத்தியது.

இதனை அடுத்து, அப்பகுதியின் பல்வேறு இடங்களில் கேமராக்கள் பொருத்தப்பட்டு மர்மவிலங்கை விவசாயிகள் கண்காணித்து வந்தனர் இந்த நிலையில் சென்ற மாதம் 26 ஆம் தேதி இரவு ரவிச்சந்திரன் என்பவர் தோட்டத்தில் சிறுத்தை நடமாடிய காட்சி CCTVயில் பதிவாகி இருந்தது. எனவே சிறுத்தையின் நடமாட்டம் உறுதியானதை அடுத்து அப்பகுதி விவசாயிகள் வனத்துறையினரிடம் சிறுத்தையை பிடிக்க கோரிக்கை வைத்தனர். இதனை அடுத்து, சிறுத்தையின் கால் தடம் அதிகமாக உள்ள இரண்டு இடங்களில் கடந்த மாதம் 28ஆம் தேதி அன்று கூண்டு வைத்தனர். இந்தகூண்டில்சிக்காமல்தொடர்ந்து 15 நாட்களாக வனத்துறையினருக்கு போக்கு காட்டி வந்தநிலையில் சிறுத்தையை பிடிக்க வைக்கப்பட்ட கூண்டு வேறு இடத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு



, காளியப்பன் என்பவர் தோட்ட பகுதியில் ஒரு கூண்டும், அம்மன் கோயில் அருகில் பழனிச்சாமி என்பவரது தோப்பு பகுதியில் ஒரு கூண்டும், தண்ணீர்பள்ளம் என்ற இடத்தில் புதிதாக ஒரு கூண்டும் வைக்கப் பட்டு. சிறுத்தையின் நடமாட்டத்தை வன ஊழியர்கள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் நேற்றிரவு அம்மன் கோவில் அருகே உள்ள பழனிச்சாமி என்பவரது தோட்டத்தின் அருகில் வைக்கப்பட்டிருந்த கூண்டில் சிறுத்தை பிடிபட்டது.



சத்தியமங்கலம் புதிய பஸ் நிலையம் அருகில் தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம், கீழ்பவானி பாசன இயக்கம் வீடு மற்றும் வீட்டு மனை உரிமையாளர்கள் சார்பில் மாவட்டச் செயலாளர் நடராஜன் தலைமையில் தமிழக விவசாய பாதுகாப்பு சங்க நிறுவனர் ஈசன், முருகசாமி, சோழாசேகர் ஆகியோர் முன்னிலையில் விவசாயிகள் நிலத்திற்கு விதிக்கப்பட்ட நிபந்தனை பட்டாவை நீக்கக்கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.